பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 13 வியாழக்கிழமை 29.10.2020 கதிர் 354

### இனி இது ரகசியம் அல்ல!

*'குருவியிருக்க பனம் பழம் விழுந்த கதை'* என்பார்கள்.

அது போல ஒரு சம்பவம் நடந்தேறியிருக்கின்றது.

சம்பந்தர் தலையிலான கூட்டமைப்புடன் ஊடாட்டம் செய்வதில் இந்தியத் தரப்பு ஏன் பின்னடிக்கின்றது – அல்லது பக்கம்02 »

# இந்தியத் தூதுவர் – சம்பந்தன் நேற்றுக் கொழும்பில் பேச்சு!

## அரசியல் தீர்வு, ஜெனீவா விடயம் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆராய்வு

(ந.லோகதயாளன்)

கொழும்பு,ஒக்ரோபர் 29

கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பிக்கும் இடையில் தூதுவரின் கொழும்பு உத்தியோகபூர்வ இல்லமான 'இந்தியன் ஹவுஸில்' நேற்று மாலை சினேகபூர்வமான சந்திப்பு இடம்பெற்றது.

தற்போதைய அரசியல் நிலைவரங்கள், இலங்கை இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு விவகாரங்கள் உட்பட பல தரப்பட்ட விடயங்கள் குறித்தும் இருவரும் பேசினர். பக்கம் 02 »



## கோப்பாயில் கொரோனா ஆஸ்பத்திரி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்ப்பாணம் கோப்பாய் கல்வியல் கல்லூரி கொரோனா தடுப்பு வைத்தியசாலையாக மாற்றும் வகையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

நாட்டில் கொரோனா நோயாளார் தொகை அதிகரிக்கும் நிலையில் வைத்தியசாலைகளின் எண்ணிக்கையும் பக்கம் 02 »

## மஹிந்தவை சந்திக்காமல் கிளம்பினார் பொம்பியோ

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ நாட்டில் இருந்து நேற்றுப் பிற்பகல் வெளி யேறினார்.

மைக் பொம்பியோ நேற்று முன்தினம் இரவு இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையில், நேற்றுக் காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பக்கம் 02 »

## ஆனையிறவில் கோர விபத்து; தாயும் மகனும் பரிதாபச் சாவு!

(ந.லோகதயாளன்)

ஆனையிறவுப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வீதி விபத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த தாயும் பக்கம் 02 »

## இலங்கையின் இறைமையை விட்டுக்கொடுக்கவேமாட்டேன்

### அபிவிருத்திக்குச் சீனா உதவியது என பொம்பியோவிடம் கோட்டா தெரிவிப்பு



சர்வதேச தொடர்புகளின்போது நாட்டின் சுயாதீனத்தன்மை, இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றை விட்டுக்கொடுப்பதற்கு நான் ஒரு போதும் தயார் இல்லை.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை பக்கம் 02 »

## இலங்கையை சீனா வேட்டையாடுகிறது!

### கொழும்பில் நின்று பொம்பியோ கடும் எச்சரிக்கை



இலங்கையைசீனாவேட்டையாடி வருகின்றது. அந்த நாடு நிலத்திலும் கடலிலும் இறையாண்மையைமீறிவருகின்றது.

– இவ்வாறு அமெரிக்க இராஜாங்கச் பக்கம் 02 »

## 9 ஆயிரத்தைக் கடந்தது கொரோனாத் தொற்று!

### நேற்றும் 335 பேர் பாதிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்தைக் கடந்துள்ளது. நேற்றும் 355 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை மற்றும் பேலியகொட மீன் சந்தை தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்களுக்கும், தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டவர்களுக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து பக்கம் 02 »

## அமெரிக்கா இரட்டை வேடம்!

### பொம்பியோவுக்கு சீனா உடனடியாகவே பதிலடி

இலங்கையுடனான இராஜதந்திர அணுகுமுறையில் அமெரிக்கா ஒரே நேரத்தில் இரண்டு வேடங்களைப் போடுகின்றது எனக் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கையை சீனா வேட்டையாடுகின்றது என்று நேற்றுப் பகல் கொழும்பில் வைத்து கருத்து வெளியிட்ட அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவுக்கு பதிலடிகொடுக்கும் வகையில் நேற்றுப் பிற்பகல் சீனத் தூதரகம் ருவிட்டரில் இந்தப் பதிவை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ தனது 2 நாள் உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக் கொண்டுகொழும்பில்இருந்து நேற்றுப் பிற்பகல் புறப்பட்டுள்ளார்.

முன்னதாக கொழும்பில் நேற்று வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற கூட்டு ஊடக மாநாட்டில் பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிகு பண்ணுகின்றது – என்பது குறித்து இந்தியத்தரப்பின்சில கருத்து நிலைகளை நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அது காலையில் வெளியானதும் நேற்று மாலையில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் – சம்பந்தன் சந்திப்பு திடீரென நடந்தேறியிருக்கின்றது. அந்தச் சந்திப்பு முன்னரே ஒழுங்கு செய்யப்பட்டதா அல்லது நேற்றைய எனது பத்தியின் விவரம் வெளியானமையை அடுத்து திடுதிப்பென ஒழுங்கு செய்யப்பட்டதா என்பதை நானறியேன்.

எது, எப்படியாயினும், இந்திய இராஜதந்திர மட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக நிலவும் கருத்து நிலைப்பாட்டை நேற்று நான் சற்று வெளிப்படுத்தியிருந்தேன். அதைப் புரிந்து கொண்டு உரிய Damge Clearing வேலையைசம்பந்தன் விரைந்து ஆரம்பித்திருப்பாராயின் அது அவருக்கும் நல்லது, தமிழினத்துக்கும் நல்லது.

நல்லது நடந்தால் சந்தோஷமே!

★ ★ ★

யாழ்.மாநகர சபையைப் பொறுத்த வரை ஞாயிற்றுக்கிழமை பிறக்கும் நவம்பர் மாதம் மிகவும் முக்கியமானது.

இந்த மாதம்தான் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் யாழ்.மாநகர சபையில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

இம்முறையும் மேயர் ஆர்னோல்ட் சமர்ப்பிக்கும் வரவு – செலவுத் திட்டம் சபையால் நிராகரிக்கப்படுமானால் அவர் பதவி இழந்தவராவார்.

கடந்த தடவையும் அது தோற்கடிக்கப்பட்டது. தனக்குரிய விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி மேயர், அதை அங்கீகரித்து நடைமுறைப்படுத்தினார்.

இரண்டாவது தடவையும் வரவு – செலவுத்திட்டம் சபையால் நிராகரிக்கப்படுமானால் அதை சமர்ப்பித்த மேயர் பதவி இறங்க வேண்டியதுதான்.

48 உறுப்பினர்கள் கொண்ட யாழ். மாநகர சபையில் ஆக 16 பேரே இலங்கைத் தமிழரசுக் கட்சியினர். அவ்வளவு எண்ணிக்கையானோரை வைத்துக் கொண்டு இன்றைய நிலையில் தமது வரவு – செலவுத்திட்டத்தை நிறைவேற வைப்பது மேயருக்கு, மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலையாக இருக்கும் என்பது நிச்சயம்.

எனினும் சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஓரணி – மணிவண்ணன் குழு – தனித்துப் பிரிந்து செயற்படக் கூடிய நிலையில், அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி வரவு – செலவுத் திட்டத்தை நிறைவேற வைத்துத் தனது மேயர் பதவியை ஆர்னோல்ட் தக்க வைத்துக் கொள்வதற்கு இன்னும் சாத்தியங்கள் தாராளமாக இருக்கின்றன என்றே தோன்றுகின்றது.

இன்று நடைபெறும் யாழ்.மாநகர சபையின் அமர்வில் அடுத்த கூட்டத்தின் – 'பட்ஜெட்' சமர்ப்பிக்கப்படும் கூட்டத்தின் – செல்நெறி எப்படி அமையும் என்பதற்கான போக்கைப் புரிந்து கொள்ள முடியும் என எதிர்பார்க்கலாம்.

இது இப்படியிருக்க, இவ்வாறு வடக்கில் பல சபைகளில் அறுதிப் பெரும்பான்மையின்றியே நிர்வாகத்தைத் தமிழரசுக் கட்சி கொண்டு நடத்துகின்றது.

அதில் ஒன்று – வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச சபை. அதன் ஆட்சிப் பொறுப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் தான் உள்ளது. 31 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் தமிழரசுக்கு ஆக 9 உறுப்பினர்களே உள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன தலா ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் உள்வீட்டுச் சர்ச்சை காரணமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தவிசாளர் ஐங்கரன் பதவியை விட்டு விலகப் போகின்றார் என அறிவித்திருக்கின்றார்.

'அண்ணன் எப்ப சாவான்; திண்ணை எப்ப காலியாகும்?' என்ற எதிர்பார்ப்புடன் தவிசாளர் பதவியைப் பிடிப்பதற்கு கண்கொத்திப் பாம்பாக அங்கு பலர் காத்திருக்கின்றனர்.

அத்தகைய தரப்புகளில் ஒன்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் தந்தையார் இராமநாதன்.

கரவெட்டிப் பிரதேச சபையின் சு.க. உறுப்பினர்கள் குழுத் தலைவர் அவர்.

சாம, பேத, தான, தண்டம் என எதைப் பயன்படுத்தியாவது பிரதேச சபைத் தவிசாளர் பதவியைக் கைப்பற்றி விடக் காத்திருக்கின்றார் அவர். அதைக் கைப்பற்றுவதற்காக எந்தப் பலத்தையும் அவரால் பிரயோகிக்க முடியும்.

இந்தச் சூழ்நிலையில் பதவியில் இருக்கும் தவிசாளரை தனது உள்வீட்டுக் கட்சிக் குழப்பங்களுக்காக பதவி விலக இடமளித்து, பொல்லைக் கொடுத்து அடி வாங்கக் காத்திருக்கின்றார் தமிழரசுக் தலைவர் மாவை சேனாதிராசா.

கடந்த பொதுத் தேர்தலில் ஐங்கரன், வேட்பாளர் சுமந்திரனுக்கு ஆதரவாக நின்றார் என்று யாரோ 'போட்டுக் கொடுத்து விட்டமையால்' ஐங்கரனை வீட்டுக்கு அனுப்பி, தனது கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து அந்தப் பிரதேச சபை நிர்வாகம் கைவிட்டுப் போவதற்கு வழி செய்திருக்கின்றார் தமிழரசுத் தலைவர் மாவை என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இவர்கள் திருந்தவே மாட்டார்களா?

– மின்னல் –

## இலங்கையை சீனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் மைக் பொம்பியோ எச்சரித்தார்.

பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்கள் மற்றும் இறையாண்மை உரிமைகளைப் பயன்படுத்துவது பற்றி இலங்கைக்கு அமெரிக்கா வேறுபட்ட பார்வையை வழங்குகின்றது. ஆனால், சீனா அதற்கு மாறாக ஒரு வித்தியாசமான பார்வையை வழங்குகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன உள்ளிட்டோரைச் சந்தித்த பின்னர் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: –

நிலையான வளர்ச்சியுடன் இலங்கை மக்களுக்கு இறையாண்மையும் சுதந்திரமும் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது.

ஒரு நட்பு நாடாக அமெரிக்கா அதைச் சரியாக வழங்குகின்றது என்று நாங்கள் நினைக்கின்றோம்.

ஆனால், சீனா ஆக்கிரமிப்பு நோக்கத்தைக் கொண்டுள்ளது. இலங்கையை அந்த நாடு வேட்டையாடுகின்றது.

இலங்கையில் சீனாவின் இருப்பு குறித்து பல ஆண்டுகளாக கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கைக்கான சீனாவின் நிதிப் பங்களிப்பில் வெளிப்படைத்தன்மை இல்லாதது குறித்த கவலைகள் நீடிக்கின்றன.

இலங்கையுடனான தனது உறவை மேலும் வலுவாக்க சீனா முயன்று வருவதை அமெரிக்கா கவனித்து வருகின்றது. கொழும்பில் நடந்த பேச்சின்போது இது தொடர்பாக நாங்கள் விவாதித்தோம்.

நான் இந்தியா, மாலைதீவு மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கும் பயணத்தை மேற்கொண்டுள்ளேன்.

அனைத்து மத மக்களும் மனித உரிமைகள் மதிக்கப்படும் அமைதியான தேசத்தில் ஒன்றாக வாழ வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது.

கடந்த வருடம் தனது வெற்றி உரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனக்கு வாக்களித்தவர்கள் மட்டுமல்ல, அனைத்து குடிமக்களுக்கும் தான் ஜனாதிபதி என்று கூறினார். எங்கள் இரு நாடுகளும் முன்னேறும்போது, அமெரிக்கா அந்த வார்த்தைகளை உண்மையாகக் கருதுகின்றது – என்றார்.

## மஹிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் ஊடகவியலாளர் மாநாட்டிலும் கலந்து கொண்ட அவர்,

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்துக்கும் விஜயம் செய்தார்.

இந்தநிலையில், அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் 1.06 மணியளவில் விசேட விமானத்தின் ஊடாக மாலைதீவை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

மைக் பொம்பியோ, இலங்கை விஜயத்தின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்திக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், மஹிந்தவுடனான சந்திப்பை அவர் இரத்துச் செய்து விட்டு மாலைதீவு கிளம்பினார்.

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ தலைமையிலான உயர்மட்டத் தூதுக்குழுவினர் நேற்றுக் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தனர். இதன்போதே கோட்டாபய மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

இலங்கையின் தேவை தொடர்ந்தும் கடன் பெறுவதல்ல. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் அதிக பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வதே எமது தேவையாகும்.

வெளிநாட்டு முதலீட்டுக்குத் தடையாக அமையும் அதிகாரத்துவமுறை நடைமுறைகளை நீக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இலங்கை அதிக விவசாய வளர்ச்சியை அடைந்துகொள்வதற்குத் தேவையான வளங்களை கொண்ட நாடாகும். எமது விவசாயத் துறையை நவீனமயப்படுத்த வேண்டும். அதற்காக அறிவியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக எமக்கு உதவுங்கள்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை நடுநிலைமையை அடிப்படையாகக் கொண்டது. இலங்கை ஏனைய நாடுகளுடன் பேணி வரும் உறவுகள் பல அம்சங்களுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்றன. வரலாற்று, கலாசார உறவுகள் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு அவற்றில் முக்கிய இடம் வகிக்கின்றது.

சர்வதேச தொடர்புகளின் போது நாட்டின் சுயாதீனத்தன்மை, இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றை விட்டுக்கொடுப்பதற்கு நான் ஒருபோதும் தயார் இல்லை.

பிரிவினைவாதப் போரை நிறைவுக்குக் கொண்டுவந்ததன் பின்னர் நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குச் சீனா உதவியது. அதன் விளைவாக இலங்கை கடன் பொறிக்குள் சிக்கிக் கொள்ளவில்லை.

இந்து சமுத்திரம் சமாதான வலயமாக இருக்க வேண்டும் என்பதே இலங்கையினதும் எதிர்பார்ப்பாகும் – என்றார்.

## ஆனையிறவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகனும் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ஏ – 9 வீதியில் ஆனையிறவுப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் தாங்கி வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் யாழ்ப்பாணம், நீராவியடிப் பகுதியை சேர்ந்த 58 வயதான இராதாகிருஷ்ணன் மீனாம்பாள் மற்றும் அவரது மகனான 28 வயதுடைய இராதாகிருஷ்ணன் கிருபானந்தன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

வித்துக்குள்ளான ஓட்டோவில் பயணித்த தாயும் மகனும் படுகாயமுற்ற நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட போதிலும் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் தாங்கியைச் செலுத்தி வந்த சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கோப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கின்றது. இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் மருதங்கேணியில் ஒரு வைத்தியசாலை அமைக்கப்பட்ட நிலையில் மற்றுமோர் வைத்தியசாலையாக கோப்பாய் கல்வியல் கல்லூரியும் மாற்றப்படவுள்ளது.

இதற்காகத் தற்போது கல்வியல் கல்லூரியில் இயங்கும் கொரோனாத் தடுப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 217 பேரும் நாளை வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு கட்டடம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளது. அவ்வாறு கையளிக்கப்படும் கட்டடத்தின் மாணவர்கள் விடுதி வைத்தியர்கள் விடுதியாகவும் கல்விக் கூடம் வைத்தியசாலையாகவும் மாற்றப்படவுள்ளதனை வைத்திய அதிகாரிகள் உறுதி செய்தனர்.

## வடக்கில் முஸ்லிம்களுக்கு நாளை கரிநாள்

'2020 ஒக்டோபர் 30' – வடபுல முஸ்லிம் மக்களின் கரிநாளாகவே அனுஷ்டிக்கப்படுகின்றது என யாழ்.மாநகர சபை உறுப்பினர் கே.எம்.நியாஸ் (நிலாம்) செய்திக் குறிப்பு ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கின்றார்.

1990 ஒக்ரோபர் 30ஆம் திகதி அன்றே வடபுல முஸ்லிம் மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் இந்த நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் அகதி நிலையிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் மீள்குடியேற்றமானது இன்றும் கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது. – என்றும் அவர் தெரிவித்தார்.

## அமெரிக்கா இரட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றிய பொம்பியோ, சீனா ஒரு வேட்டையாடும் நாடு என்றும், நிலத்திலும் கடலிலும் இறையாண்மையை மீறுகின்றது என்றும் கூறினார்.

அமெரிக்கா ஒரு நண்பராகவும் பங்காளியாகவும் இருந்து வருவதாகவும், ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் இலங்கையுடனான கூட்டணியை முன்னோக்கிக் கொண்டு செல்ல விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள ருவிட்டில், இலங்கை நட்பையும் ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பதில் மும்முரமாக இருக்கின்றோம். உங்கள் Alien Vs Predator விளையாட்டு அழைப்பில் ஆர்வம் காட்டவில்லை. அமெரிக்கா எப்போதுமே ஒரே நேரத்தில் இரண்டு வேடங்களில் நடிக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளது.

## இந்தியத் தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்புக் குறித்து இரா.சம்பந்தன் நேற்றிரவு காலைக்கதிருக்குத் தகவல் வெளியிட்டார். அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு: –

முக்கிய விடயங்கள் குறித்துப் பேசினோம். தமிழர் தரப்பில் கூற வேண்டிய விடயங்களை நான் தெளிவுபடுத்தினேன்.

அரசியல் தீர்வு முயற்சிகள், புதிய அரசமைப்பு உருவாக்கம், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை அடுத்து ஏற்பட்டுள்ள விடயங்கள், இரு நாட்டு உறவுகள், இந்தியப் பிரதமருடன் தமிழ்க் கூட்டமைப்பு பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகள், ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலில் இலங்கை விடயம் போன்ற பல விவகாரங்கள் குறித்து பேசினோம். தொடர்ந்தும் பேசுவோம். – என்றார்.

யாழ்ப்பாணத்தில் இந்திய உதவித் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கலாச்சார மண்டபத் திறப்பு விழாவில் இந்தியப் பிரதமர் மோடியும் கலந்துகொள்ள வேண்டும் என இரா.சம்பந்தன் இந்தச் சந்திப்பின் போது இந்தியத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார் எனவும் அறிய வந்தது.

யாழ்ப்பாணத்தில் இந்திய அரசின் நிதிப் பங்களிப்பில் இந்திய ரூபா 100 கோடி (இலங்கைப் பணத்தில் சுமார் 250 கோடி ரூபா) செலவில் 12 அடுக்கு மாடி கலாசார மண்டபக் கட்டடத் தொகுதி ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் திறப்பதற்கு தயாராகவே உள்ளது.

அதனை அமைத்துத் தந்த இந்தியப் பிரதமர் மோடி நேரில் வருகை தந்து அதனைத் திறக்கும் நிகழ்விலும் பங்குபற்ற வேண்டும் எனக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன் தனது விருப்பத்தை இந்தியத் தூதரிடம் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் தலைவரின் விருப்பத்தினை உரிய தரப்பிற்கு அனுப்புவதாக உயர் ஸ்தானிகர் பதிலளித்துள்ளார்.

## 9 ஆயிரத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 205 ஆக உயர்வடைந்துள்ளது. அவர்களில் 5 ஆயிரத்து 111 தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 4 ஆயிரத்து 75 பேர் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர். அதேவேளை, 19 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்)

# கொரோனா உயிரிழப்பு உடல் தகனம் அரசின் விடாப்பிடிக்குக் கண்டனம்!

## முஜிபுர் எம்.பி. தெரிவிக்கிறார்



உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கியுள்ள இரு ஆலோசனைகளில் ஒன்றையே அரசாங்கம் தற்போதும் பின்பற்றி வருவதாகவும் மரணமடைந்தவர்களின் உடல்களை எரிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

20ஆவது திருத்தத்துக்குப் பின்னர் நாட்டில் கொரோனா பரவும் நிலைமை அதிகரித்துச் செல்கின்றது.

வைத்தியசாலைகளில் கூட தொற்றாளர்களைத் தங்கவைப்பதற்கு இடமில்லாத நிலை உருவாகியுள்ளது.

அரசாங்கம் உருவாக்கியுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்கள் போதாத நிலையில், வீட்டிலேயே தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

கொரோனா நோய் நிலைமையின் காரணமாக மக்களுக்கு உணவுக்குக்கூட வழியில்லாத நிலைமை ஏற்படுமென்று எல்லோருக்கும் தெரிந்து விட்டது.

அதேவேளை கொரோனாவால் ஏற்படும் மரணங்களின் பின்னர் உடலை அடக்கம் செய்வதில் அரசாங்கம் பழைய முறையையே பின்பற்றி வருகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கியுள்ள இரு ஆலோசனைகளில் ஒன்றையே அரசாங்கம் இன்னும் பின்பற்றி வருகின்றது. மரணமடைந்தவர்களின் உடல்களை எரிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருக்கின்றது.

இந்நாட்டில் தங்களுடைய நம்பிக்கையின் படியும் மார்க்க கடமைகளின்படியும் உடலை அடக்கம் செய்யும் சமூகங்களும் இருக்கின்றன.

ஆனால் அதற்கு அரசாங்கம் இடம்கொடுக்காமலும் தீர்வை வழங்காமலும் எரிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றது. இதனை வன்மையாக கண்டிக்கின்றோம். – எனத் தெரிவித்தார்.

## தேங்கிய சகல மீன்களையும் அரசே 4 நாள்களுள் கொள்வனவு செய்யும்

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக களஞ்சியப்படுத்தி வைத்துள்ள அனைத்து மீன்களையும் அடுத்த நான்கு நாள்களுக்குள் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மினுவாங்கொடை கொரோனா கொத்தணியை அடுத்து பேலியகொட மத்திய மீன் சந்தையில் கொரோனா தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டவர்களால்கொரோனா கொத்தணி தோன்றியது.

இதனால் மீன்களை விற்பனை செய்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டது.

எனவே களஞ்சியப்படுத்தி வைத்துள்ள அனைத்து மீன்களையும் அடுத்த நான்கு நாள்களுக்குள் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வாறு விலை கொடுத்து கொள்வனவு செய்யும் மீன்கள் எதிர்காலத்தில் மீன் ரின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் என்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## கற்களுக்குள் மறைத்து வைத்து முதிரைக் குற்றிகள் கடத்தல்!

### பூநகரியில் சம்பவம்; ஒருவர் கைது





சூட்சுமமாக மறைத்து கடத்திச் செல்லப்பட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகள் பூநகரி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஜெயபுரம் காட்டிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சூட்சுமமாக முதிரை மரக்குற்றிகளை ஏற்றியவாறு பயணித்த டிப்பர் வாகனத்தைச் சோதனையிட்ட பொலிஸார் அதிலிருந்து முதிரை மரக்குற்றிகளை மீட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பூநகரி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக அந்த வாகனம் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது மரக்குற்றிகளை கற்களால் மறைத்து சூட்சுமமான முறையில் கடத்த முற்றப்பட்டுள்ளமை தெரிய வந்தமையையடுத்து அந்த மரக்கடத்தல் தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையுடன், டிப்பர் வாகனமும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீட்கப்பட்ட முதிரை மரக்குற்றிகளின் பெறுமதி 10 லட்சம் ரூபா எனவும், சம்பவம் தொடர்பான விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் சந்தேக நபருக்கெதிராக வழக்குத் தொடர உள்ளதாகவும் பொலிஸார் தெரி வித்தனர்.

அண்மைய நாள்களாக கிளிநொச்சி, பூநகரி, வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளில் சட்டவிரோத மரக்கடத்தல்கள் தொடர்பான விசேட சோதனை நடவடிக்கைகளின் ஊடாக பெறுமதி வாய்ந்த மரக்குற்றிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்கு உள்ள பகுதிகளில் வாரத்தில் இருநாள்கள் கடைகள், மருந்தகம் திறப்பு!

### பொலிஸ் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவிப்பு



தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுகளில் மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வாரத்தில் இரு நாள்களில் அப்பகுதிகளில் கடைகள் மருந்தகங்கள் என்பவற்றைத் திறந்து வைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் பொலிஸ் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெளிவுபடுத்துகையில் –

கம்பஹா மாவட்டத்தில் 37 பொலிஸ் பிரிவுகள் கொழும்பு மாவட்டத்தில் 21 பொலிஸ் பிரிவுகள், களுத்துறை மாவட்டத்தில் 5 பொலிஸ் பிரிவுகள் மற்றும் குளியாப்பிட்டியில் 5 பொலிஸ் பிரிவுகள் என 68 பொலிஸ் பிரிவுகளில் இவ்வாறு தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டத்தில் ஊரடங்கு அமுலிலுள்ள பொலிஸ் பிரிவுகளில் திங்கள் மற்றும் வியாழக்கிழமையும், கொழும்பு மற்றும் குருணாகலில் ஊரடங்கு அமுலிலுள்ள பொலிஸ் பிரிவுகளில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை வர்த்தக நிலையங்கள், மருந்தகங்களைத் திறந்து வைக்க அனுமயளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மக்கள் தங்களுக்கு அவசியமான பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது உரிய சுகாதார விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாகும். – என்றார்.

## நல்லூர், வலி.கிழக்கு சபைகளுக்கு சுமந்திரன் எம்.பி. நேற்று விஜயம்!





யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று உத்தியோகப்பற்றற்ற விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான விஜயம் தொடர்பான அவரது நிகழ்ச்சி நிரலில் நேற்று புதன்கிழமை வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேசசபைக்கு விஜயம் செய்த சுமந்திரன், தவிசாளர் நிரோஷனும் உப தவிசாளர், உறுப்பினர் தவநாயகம் ஆகியோருடனும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தொடர்ந்து நல்லூர் பிரதேசசபைக்கு விஜயம் செய்த அவர், தவிசாளர் தியாகச்சந்திரமூர்த்தி, உப தவிசாளர் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட சபைகளுக்கு விஜயம் செய்த சுமந்திரன், தவிசாளர்களுடன் பிரதேசசபைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், வரவு – செலவுத் திட்ட ப்ராதீடு தயாரிப்பு தொடர்பாகவும் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு, பருத்தித்துறை நகரசபை, கரவெட்டி, பருத்தித்துறை பிரதேசசபை ஆகியவற்றின் தவிசாளர்களுடன் சுமந்திரன் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது..

நாடாளுமன்ற உறுப்பினருடன் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் மற்றும் அவரின் ஆதரவாளர்களான சுரேஷ், அனோஜன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு வருட காலத்துக்குள் புதிய அரசமைப்பு வரும்!

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கை இறையாண்மை மீது அமெரிக்க - சீனக் கரிசனை

இலங்கையில் அரசியல் நோக்கர்களின் பேசுபொருளாக இருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சரின் (செயலரின்) விஜயம் முற்றுப் பெற்று விட்டது.

ஏதோ இரண்டு நாள் விஜயம் என்று பேசப்பட்டாலும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அரை நாள் பயணம்தான் அது. நேற்று முன் தினம் முன்னிரவே அவர் கொழும்பை வந்தடைந்தார். அன்றிரவு வெளி இராஜதந்திர நடவடிக்கைகளில் அவர் ஈடுபடவில்லை. நேற்றுக் காலை முதல் மதியம் வரை சில சந்திப்புகள், ஊடகவியலாளர்கள் நேர்முகம் போன்றவற்றை முடித்துக் கொண்டு மதியம் ஒரு மணியளவிலேயே அவர் மாலைதீவுக்குப் புறப்பட்டு விட்டார்.

இந்த அரைநாள் இராஜதந்திர நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க பல அம்சங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

* மைக் பொம்பியோ – இலங்கை ஜனாதிபதி சந்திப்பு மிக முக்கியமான விடயம். அதன் முழுமையான விவரம் இதுவரை வெளியாகவில்லை.

* பொறுப்புக் கூறலில் இருந்து இலங்கை விலகமுடியாது. அத்தோடு நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை இலங்கை உறுதி செய்ய வேண்டும் என்று பொம்பியோ கொழும்பில் வைத்துக் கூறியிருக்கின்றார்.

* இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா விதித்துள்ள பயணத் தடை தொடரும் என்று கொழும்பில் வைத்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

* நாட்டின் பிரதமரை – மிக மூத்த அரசியல்வாதியான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை – சந்திக்காமலேயே அமெரிக்க வெளியுறவு அமைச்சர் இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு விட்டார்.

* இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இலங்கை விவகாரத்தை மையமாக – தளமாக – வைத்து, சீன, அமெரிக்கத் தரப்புகள் இந்த அரை நாள் விஜயத்துக்குள் கடுமையாக மோதிக் கொண்டிருக்கின்றன.

– இவை அமெரிக்கப் பிரதிநிதிகள் வருகையை ஒட்டிக் கட்டவிழ்ந்த முக்கிய விடயங்கள்.

'எதற்கெடுத்தாலும் – எந்த விவகாரத்தைத் தொட்டாலும் – நாட்டின் இறையாண்மை' என்று சத்தமிடும் பௌத்த, சிங்களத் தேசியவாதிகள், நேற்று அமெரிக்க அரசின் முக்கிய பிரதிநிதியின் வருகை சமயம் ஒளித்துக் கொண்டு விட்டனர். தாங்கள் தூக்கிப் பிடித்து ஆட்சியில் ஏற்றியிருக்கும் ராஜபக்ஷக்களின் சீற்றத்தைத் தவிர்ப்பதற்காகவோ என்னவோ வழமையான தங்களின் தீவிர அமெரிக்க எதிர்ப்பு வாதத்தையும் மூடை கட்டி ஒரு புறம் தள்ளி வைத்து விட்டு அவர்கள் ஒளித்து விட்டார்கள் அல்லது ஒய்வெடுக்கப் போய்விட்டார்கள்.

அமெரிக்க விவகாரத்திலும் நாட்டின் இறையாண்மையை முன்னிறுத்திக் கூக்குரலிட்டு, ஆர்ப்பாட்டம் செய்து, ஆரவாரம் பண்ணும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றோர் அடங்கி விட்டமையினால் என்னவோ, இந்த முறை 'இலங்கையின் இறையாண்மை' என்ற விவகாரத்தை அமெரிக்காவே தூக்கிப் பிடித்திருக்கின்றது. அதுவும் இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை குறை கூறிக் கண்டிப்பதற்கு இலங்கையின் இறையாண்மையைத் தூக்கிப் பிடித்திருக்கின்றார் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர்.

இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்கும் வகையில் மோசமான ஒப்பந்தங்களைக் கொண்டு வந்துள்ளது சீனா எனக் கொழும்பு மண்ணிலும் வைத்துக் குற்றம் சுமத்தி நீட்டி முழக்கியிருக்கின்றார் அமெரிக்க அரசின் உயர்மட்டப் பிரதிநிதி.

இதில் ஒரு வேடிக்கை உண்டு. சீனாவுடன், அமெரிக்கத் தரப்பு சுட்டிக்காட்டும் மோசமான ஒப்பந்தங்களைச் செய்தது இலங்கை தான்; இலங்கை அரசுகள்தாம். அதற்காக சீனாவை மட்டும் குறை கூறிப் பயனில்லை. அந்த ஒப்பந்தங்களைச் சீனாவுடன் இலங்கை செய்து கொண்டமை தவறு என்று அமெரிக்கப் பிரதிநிதி கொழும்பைக் கடிந்து கொள்ளவில்லை. மறுபுறத்தில் சீனா எங்களை அத்தகைய ஒப்பந்தங்களில் – இறையாண்மையைப் பாதிக்கும் உடன்பாடுகளில் – ஆசை காட்டி மாட்டி விட்டு விட்டது என்றோ, அல்லது எமது நாட்டின் நிதி நெருக்கடி மற்றும் பொருளாதாரச் சிக்கல் போன்ற பிரச்சினைகளைப் பயன்படுத்தி இத்தகைய உடன்பாட்டுப் பொறிகளில் சிக்க வைத்து விட்டது என்றோ கொழும்பு அரசு கருத்துப் பிரதிபலிக்கவில்லை.

ஆனால், ஏதோ இலங்கையின் நலனிலும், அதன் இறையாண்மையை மதித்துப் பேணுவதிலும் தாங்கள் மட்டுமே உண்மையான சிரத்தையும், நட்புறவுக் கரிசனையும் கொண்டவர்கள் என்று காட்டிக் கொண்டு, அதன் பெயரில் ஓர் இராஜதந்திர சேறு வாரி வீசலை அமெரிக்காவும் சீனாவும் முன்னெடுத்துள்ளன.

இது ஒன்றுதான் அமெரிக்க வெளியுறவு அமைச்சரின் கொழும்பு விஜயத்தை ஒட்டிக் கட்டவிழ்ந்த பிரதான விவகாரமாகும்.

இரண்டு நாடுகளுமே – அமெரிக்கா, சீனா இரண்டுமே – 'ஆடு நனைகின்றது என்று ஒநாய் கவலைப்பட்ட கதை' போன்றே இலங்கையின் இறையாண்மை குறித்து அதிகம் பிரபலாபித்துக் கொண்டுள்ளன என்பதே உண்மையாகும்.

அது, புரிந்தும் தெரியாதமை போல, கருத்துக் கூறாமல் சகிக்க வேண்டிய நிலையில் கொழும்பு. அதனால்தான் அதிகம் அலட்டாமல் அது இவ்விடயத்தில் அடக்கி வாசித்தது.

### கெஹலிய நம்பிக்கை



புதிய அரசமைப்பை உருவாக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருவதாக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்–

20 ஆவது திருத்தச்சட்டத்தையும் புதிய அரசமைப்பையும் குழப்பிக் கொள்ளக் கூடாது.

எதிர்காலத்தில் முழுமையான புதிய அரசமைப்பே கொண்டுவரப்படும். இதற்கான 11 பேர் கொண்ட விசேட நிபுணர் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இந்தப் பணியை வேகமாகச் செய்து வருகின்றனர். 20 ஆவது திருத்தச்சட்டம் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே கொண்டுவரப்பட்டது.

ஒரு வருடகாலத்திற்குள் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா பாதிப்புக்குள்ளான பலர் பஸ்களில் பயணம் மேற்கொண்டனர்!

### மக்களுக்கு எச்சரிக்கை

பஸ்களின் இலக்கங்கள் நன்கு தெரியக் கூடிய வகையில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்களிடம் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கோரிக்கை விடுத்துள்ளார்.

பேலியகொடை மீன் சந்தை மூலம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட பலர் பொதுப்போக்குவரத்து சேவைகளில் பயணித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எனினும் தாங்கள் பயணித்த பஸ்கள் எவை என்பதை அடையாளப்படுத்துவதற்காக அதன் இலக்கங்களை அவர்களால் நினைவுபடுத்திக் கூறமுடியாத நிலைமை உள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்காரணமாகவே, அரச மற்றும் தனியார் பஸ் துறையினரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைப்பதாகப் பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார்.

இதேநேரம், பஸ்களில் பயணிக்கும் பயணிகள், தாங்கள் பயணித்த பஸ்களின் இலக்கங்களை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

புஸ்களில் கொரோனா நோயாளர் பயணித்திருந்தால், அந்தப் பஸ்களில் பயணித்த ஏனையவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு அறிவித்தல்களை வழங்க தங்களுக்கு இலகுவானதாக இருக்கும் என்றும் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

## அலுவலக அடையாள அட்டை ஊரடங்குக்குப் பயன்படுத்தலாம்

அத்தியாவசிய சேவைப் பணியாளர்கள் ஊரடங்கு வேளையில் பயணிக்கும் போது தமது அலுவலக அடையாள அட்டையை ஊரடங்கு அனுமதிக்காகப் பயன்படுத்தலாம் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படி சுகாதார சேவைகள், விமான நிலையம், வெளிவிவகார அமைச்சு, தீயணைப்பு திணைக்களம் மற்றும் வெகுஜன ஊடகம் ஆகிய துறைகளில் பணிபுரிவோரே தமது அலு வலக அடையாள அட்டையை ஊரடங்கு வேளை அனுமதிக்குப் பயன்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அவர்கள் தங்கள் பணியிடத்துக்குச் செல்லும் போதும் வெளி யேறும் போதும் கொரோனா தொற்று சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மொறட்டுவையில் 42 பேருக்கு தொற்று!

மொறட்டுவையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையை அடுத்து 42 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பேலியகொடை மீன் சந்தையில் இனங் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்களை இனங்கண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போதே இவர்கள் அடையாளம் காணப்பட்டனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பரிசோதனையின் பின்னரே மொரட்டுவ பகுதிக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொரளையில் 20 பேருக்கும் கொட்டாஞ்சேனையில் 44 பேருக்கும் மட்டக்குளியில் 36 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## யாழ். இந்துவிலிருந்து 179 பேர் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி!

யாழ்.இந்துக் கல்லூரியிலிருந்து 179 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ளனர் என கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.

31 மாணவர்கள் பொறியியல் பீடத்துக்கும், 21 மாணவர்கள் மருத்துவ பீடத்துக்கும் தெரிவாகியுள்ளமையுடன் சகல துறைகளுக்குமாக மொத்தமாக 179 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ளனர்.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் 107 பேரும் பழைய பாடத்திட்டத்தில் கீழ் 72 பேரும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி பொலிஸாரால் கொரோனா விழிப்புணர்வு!

கிளிநொச்சி பொலிஸாரால் விசேட கொரோனா பாதுகாப்பு விழிப்புணர்வு செயற்திட்டம் நேற்று (புதன்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரில் சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் சுத்திகரிக்கப்பட்டமையுடன், பொது மக்களை விழிப்பூட்டும் ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் தலைமை பொலிஸ் நிலைய அதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அமெ. இராஜாங்க செயலர் வருகை சீனாவுக்கு கசப்பானமை எதற்காக?

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ஹேஷ விதானகே கேள்வி

அமெரிக்காவின் இராஜாங்க செயலர் இலங்கை விஜயம் ஏன் சீனாவுக்குக் கசப்பானது? அவ்வாறானால் இரு நாடுகளும் இலங்கையை கையாள முயற்சிக்கின்றனவா?– என்ற சந்தேகமும் உள்ளது. எனவே அரசாங்கம் வெளிப்படையாக குறித்த விஜயம் தொடர்பில் அறிவிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷ விதானகே தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை தனது சுயாதீனத் தன்மைக்கு சிக்கல் ஏற்படாத வகையில் சர்வதேச தொடர்பை பேணிவந்துள்ள போதிலும், சீனா மற்றும் அமெரிக்காவின் முகாமாக இலங்கையை மாற்ற முயற்சிப்பதானது எதிர்காலத்தில் பாரிய நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என்றும் அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு சுட்டிகாட்டியுள்ள அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அமெரிக்க இராஜாங்க செயலாளரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சீனா இலங்கைக்கு கடிதம் அனுப்பியுள்ளது. இதற்கான காரணம் என்ன? அவரது வருகை சீனாவுக்கு ஏன் மனக் கசப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை தனது சுயாதீன தன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சிறந்த முறையில் சர்வதேசத்துடன் தொடர்பைப் பேணி வந்தது. தற்போது இடம்பெறும் சம்பவங்களைப் பார்க்கும் போது சீனா மற்றும் அமெரிக்காவின் முகாமாக இலங்கையை மாற்ற முயற்சிக்கின்றார்களா என்று எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறான நிலைமை ஏற்பட்டால் எதிர்காலத்தில் நாம் பாரிய இழப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். – என்று தெரிவித்தார்.

# உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக கொரோனா தடுப்பு முன்னாயத்தம்!

## மட்டக்களப்பில் முன்னெடுப்பு

தற்போது நாட்டில் வியாபகம் எடுத்துள்ள கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் முன்னாயத்த நடவடிக்கையாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக சகல உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும் செயலாளர்களுக்கும் மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். பிரகாஸ் அறிவுறுத்தல்களை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த அறிவுறுத்திலில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

மாவட்ட கொரோனா வைரஸ் தொற்று தவிர்ப்பு தொடர்பான செயலணியால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மத வழிவழிபாட்டுத் தலங்களில் இடம்பெறுகின்ற பூசைகளில் மக்கள் கலந்து கொள்வதைத் தவிர்த்தல், சிகையலங்கார நிலையங்களைப் பூட்டுதல், விளையாட்டு மைதானம் உட்பட பொதுவான இடங்களை அடையாளப்படுத்தி சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலுக்கமைய அங்கு பொதுச் சந்தைகளை நடத்துதல் –

தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைந்துள்ள இடங்களுக்குள் வருகின்ற அலுவலகங்களில் 50 வீதமான உத்தியோகத்தர்களைக் கொண்டு நாளாந்த அலுவலகக் கடமைகளை நிறைவு செய்தல் –

தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் சேருகின்ற திண்மக் கழிவுகளை அந்தப் பிரதேசத்திற்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலுக்கமைய மேற்கொள்ளுதல் –

இந்த விடயங்கள் எதிர்வருகின்ற 02 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்படுள்ளது.

# மட்டக்களப்பு பாடசாலை ஒன்றில் வெடிபொருள் உண்டென அகழ்வு!

## பொலிஸாருக்குக் கிடைத்தது ஏமாற்றம்




மட்டக்களப்பு நவகிரி பாடசாலை வளாகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெடிபொருள்களைத் தேடி பொலிஸார் மேற்கொண்ட அகழ்வு நடவடிக்கையில் எவையும் மீட்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள மண்டூர் 37 ஆம் கிராம நவகிரி பாடசாலை வளாகம் கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது முகாமாகச் செயற்பட்டிருந்தது.

இந்த நிலையில், அந்தப் பகுதியில் நிலத்தில் வெடிபொருள்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன என தேசிய புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் அதனைத் தோண்டி சோதனையிட நீதிமன்றத்தில் அனுமதி கோரப்பட்டது.

இதற்கமைய களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்றத்தில் பெறப்பட்ட கட்டளைக்கு அமைவாக தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினரின் பங்குபற்றுதலுடன் வெல்லாவெளி பொலிஸார் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த தேடுதல் நடவடிக்கை நேற்று முன் தினம் மாலைவரை இடம்பெற்றபோதும் எந்த பொருள்களும் மீட்கப்படவில்லை.

இந்த நிலையில், அகழ்வு நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு நோயாளர் நலன்புரி சங்கத்தால் அன்பளிப்பு!




தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் தளவாடங்கள் நேற்று (புதன் கிழமை) அன்பளிப்புச் செய்யப்பட்டன.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு புதிய வைத்திய உத்தியோகத்தர்கள் வெளிமாவட்டங்களிலிருந்து கடமைக்காக வரவிருக்கின்றார்கள். அவர்களுக்குரிய விடுதி வசதிகள் இன்மையால், அதற்கான ஏற்பாட்டை உடனடியாக மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் உதவியைக் கோரியிருந்தார்.

நோயாளர் நலன்புரிச் சங்கம் அந்த வேலைகளைப் பொறுப்பெடுத்து 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை செலவு செய்து பழைய தாதியர் விடுதியைத் திருத்தி வைத்தியர்களுக்கான விடுதியாக உருவாக்கியது. பின்னர் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் அந்த நிதி நோயாளர் நலன்புரிச் சங்கத்துக்கு மீளளிக்கப்பட்டமையுடன், விடுதிக்கான கட்டில்கள், அலுமாரிகள் என்பனவற்றையும் சுகாதாரத் திணைக்களம் வழங்கியிருந்தது.

விடுதியில் தங்குகின்ற வைத்தியர்களின் தேவைக்காக 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் 2 குளிர்சாதனப் பெட்டிகள், சோபா செற்றிகள், தொலைக்காட்சி மேசை என்பனவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்தப் பொருள்களை நேற்று தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலை வைத்தியர்கள் விடுதியில் வைத்து நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன், சங்கத்தின் பொருளாளரும் முகாமைத்துவ உத்தியோகத்தருமான செல்வி குலேந்திரன் திவ்யானி, சங்கத்தின் நிர்வாக உறுப்பினரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் பா.மரியதாஸ் ஆகியோர் இணைந்து வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஆர்.டி.ஜி.விமலசேனவிடம் வழங்கி வைத்தனர்.

# பூண்டுலோயா எரோ தோட்டத்தில் ஒருவருக்கு கொரோனா தொற்று!

கொத்மலை, பூண்டுலோயா எரோ தோட்ட பகுதியில் உள்ள ஒருவருக்கும் கொரோன வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பத்து குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அவருடன் தொடர்பைப் பேணியவர்கள் விவரமும் திரட்டப்பட்டு வருகின்றது.

பேலியகொடை மீன் சந்தையில் தொழில் புரியும் இவர் அண்மையில் வீடு திரும்பியுள்ளார். சில இடங்களுக்குச் சென்று வந்தும் உள்ளார்.

பேரியகொடை கொத்தணி பரவலையடுத்து இவரிடம் பீ.சீ.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகளைப் பெறுவதற்கான நடவடிக்கையை சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்டிருந்தனர். பரிசோதனை முடிவு நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) வெளியானது. அதில் வைரஸ் தொற்று உறுதியானது.

இதன்பின்னர் பூண்டுலோயா நகரம் நேற்று (புதன்கிழமை) தற்காலிகமாக மூடப்பட்டு தொற்றுநீக்கி தெளிக்கப்பட்டு தொற்றுநீக்கம் செய்யப்பட்டது. பிரதேச சபைத் தலைவர் சுசந்த ஜெயசுந்தர ஆலோசனையின் பிரகாரம் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை. கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட பல பகுதியிலும் பலரிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து வருபவர்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் தகவல்களை வழங்கவேண்டும் எனவும், வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் தொடர்பிலும் விழிப்பாகவே இருக்கவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுமாறும் கொத்மலை பிரதேச மக்களிடம் கொத்மலை பிரதேச சுகாதார அதிகாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# அமெரிக்காவுடனான இராஜதந்திர பேச்சை அரசு நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்!

## வலியுறுத்துகிறார் அநுரகுமார திஸாநாயக்க

இந்து மா சமுத்திரத்தின் கடல்சார் அதிகாரங்களை அமெரிக்கா வசப்படுத்தும் நோக்கத்திலேயே அந்நாட்டு இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோவின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது.

எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோர் அமெரிக்க இராஜதந்திர பேச்சுகள் தொடர்பாக நாட்டுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸா நாயக்க வலியுறுத்தினார்.

ஜே.வி.பி. தலைமை அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத்தெரிவித்த அவர்



மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமெரிக்க இராஜாங்க செயலர் ஜனாதிபதியுடனும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடனும் முன்னெடுத்த பேச்சுகள் தொடர்பாக நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இந்த பேச்சுகளின் போது அமெரிக்காவால் முன் வைக்கப்பட்ட யோசனைகள் என்ன, அவற்றில் எதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது, எதனை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளது போன்ற விடயங்களை வெளிப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கூறியமையைப் போன்று தற்போதைய அரசாங்கத்துக்கு உண்மையில் எம்.சி.சி. ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதில் விருப்பம் இல்லையென்றால் அதனை நேரடியாக அமெரிக் காவிடம் தெரிவிக்க வேண்டும்.

எனினும் தற்போது அமெரிக்காவின் தேவைக்கேற்ப செயற்படுவதற்காக மக்களை ஏமாற்றி அதில் கையெ ழுத்திட அரசாங்கம் முற்படுமானால் நாட்டை நேசிப்பவர் கள் அதற்கு எதிராகப் போராடவேண்டும்.- என்றார்.

# நாட்டில் கொரோனாத் தொற்றின் தாக்கம் மொத்த பாதிப்பு 9 ஆயிரத்தைத் தாண்டியது!

நாட்டில் மேலும் 211 பேருக்கு கொரோனா வைரஸ் பெருந்தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ள ஒன்பது பேருக்கும் மற்றும் முன்னைய தொற்றாளர்க ளுடன் நெருங்கிப் பழகிய 202 பேருக்குமே இவ்வாறு கொரோனா தொற்று பரவியுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்களில் 140 பேர் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் இருந்து பதிவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மினுவங்கொட மற்றும் பேலியகொட கொரோனா கொத்தணியில் பதிவாகியுள்ள மொத்த வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஐயாயிரத்து 607 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் இதுவரை பதிவாகியுள்ள கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒன்பதா யிரத்து 81 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நான் காயிரத்து 75 பேர் குணமடைந்துள்ள நிலையில் இன்னும் நான்காயிரத்து 987 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, நாட்டில் 19 பேர் இதுவரை கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மினுவங்கொட பிரண்டிக்ஸ் கொத்தனி விசாரிப்பதற்கு விசேட குழு நியமனம்!

மினுவங்கொட பிராண்டிக்ஸ் கொத்தணியில் கொரோனா வைரஸ் தொற்று எவ்வாறு உருவா னது என்பது தொடர்பாக விசாரணை செய்ய குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு குற்றவியல் பிரிவினரின் ஆலோ சனைக்கு அமைவாக உதவி பொலிஸ் அதிகாரி ஒருவரின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட் டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனாத் தொற்றின் மூன்றாம் அலை மினுவாங்கொடவில் உள்ள பிராண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட் டமையைத் தொடர்ந்து நாடு முழுவதும் வைரஸ் தொற்று பரவல் தீவிரமடைந்துள்ளது.

இந்நிலையில், அந்த ஆடைத் தொழிற்சாலை யில் எவ்வாறு வைரஸ் தொற்று பரவியது என்பது இன்னும் கண்டறியப்படாத நிலையில் விசாரணை கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாப் பொலிஸாரால் விழிப்புணர்வு செயற்றிட்டம்





வவுனியாப் பொலிஸாரால் விசேட கொரோனா விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் நேற்று காலை 10 மணிக்கு இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது, புதிய பஸ் நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபடும் அனைத்து பஸ்களிலும் கொரோனா தொடர்பான விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

சரியான நேரத்தில் சரியாக மாஸ்க் அணிந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு தெரி விக்கப்பட்டுள்ள ஸ்டிக்கர்களே ஒட்டப்பட்டன. அத்துடன் பஸ் நிலையம் மற்றும் பஸ் என்பவற்றுக்கும் கிருமி நீக்கும் மருந்துகள் பொலிஸாரால் விசிறப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர் திஸ்சலால் த சில்வா, வவுனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.பி.மல்வலகே, வவுனி யாப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மானாவடு, வவுனியா போக்குவரத்து பிரிவு பொலிஸ் பொறுப்பதி காரி திஸாநாயக்கா மற்றும் பொலிஸார், இளைஞர் சேவைகள் மன்றத்தினர், சுகாதார திணைக்களத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (100)

# தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீடுகளுக்கு நிவாரணம்!

## பஸில் ஆலோசனை



கொவிட்- 19 வைரஸ் தாக்கத்தால் தனிமைப் படுத்தப்பட்டுள்ள வீடுகளுக்கு இரண்டு வாரகாலத்துக் குத் தேவையான உலர் உணவுப் பொதிகளை வழங் குமாறும், ஊரடங்கு சட்டத்தால் வாழ்வாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா நிவா ரண நிதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன் னெடுக்குமாறும் பொருளாதார புத்தாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ அரச அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கொவிட் - 19 வைரஸ் முதல் சுற்று தாக்கத்தின் போது முன்னெடுக்கப்பட்ட சேவை நடவடிக்கைகளை மீண்டும் முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை தற்போது தோற்றம் பெற்றுள்ளது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தில் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சாரம், நீர், மருந்து பொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்களைத் தடையின்றி விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மாவட்டத் தலை வர்கள், சுகாதார சேவையாளர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள் ஊடாக முன்னெடுக்கப்படுவது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு 2 வார காலத்துக்குத் தேவையான அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகளை வழங்கவும் -

ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பிரதேசங் களில் வாழ்வாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்க ளுக்கு 5 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கும் நட வடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பதும் - அவசி யமாகும். - என்றார்.

## யாழ்ப்பாணம் குருநகரில் பகுதியில் 38 பேருக்கு பி.சி.ஆர். சோதனை!

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணி மனைக்குட்பட்ட குருநகர் பகுதியில் இன்று 38 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

குருநகர் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரு வருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டமை யைத் தொடர்ந்து அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களுக்கே நேற்று பரிசோதனை முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வைரஸ் தொற்றுக்குள்ளானோர் கடமை யாற்றிய நிறுவன ஊழியர்கள் மற்றும் தொற் றுக்குள்ளானவரின் மனைவி மற்றும் குடும்பத்தின ருக்கு இவ்வாறு பரிசோதனை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

மேலும், குருநகரின் பாஷையூர் சந்தைப்பகுதி யில் எழுமாற்றாகத் தெரிவுசெய்யப்பட்ட மீன் சந்தை வியாபாரிகள் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த சுகாதார தொழிலாளிகள் ஏழு பேரும் குறித்த 38 பேரில் உள் ளடங்குகின்றனர் என யாழ்ப்பாணம் சுகாதார வைத் திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.



# வல்லரசுகள் விடயத்தில் தப்ப முடியாது இலங்கை



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் ஏழு நாள்களே உள்ளன. இந்த நிலையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்

இந்த விஜயம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருந்த அமெரிக்க முதன்மை பிரதி உதவி இராஜாங்க செயலர் டீன் தொம்ஸன், வெளிநாட்டு உறவுகள் தொடர்பாக இலங்கை கடினமானதும் ஆனால் தேவையானதுமான தீர்மானங்களை இலங்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரியிருந்தார்.

இராஜதந்திரம் என்பது மிக மோசமானவற்றைச் செய்வதானாலும் கூறுவதானாலும் இனிமையாகக் கூறுவதென பிரபல அமெரிக்க எழுத்தாளர் ஐசக் கோல்ட் பேர்க் ஒருமுறை கூறியிருந்தார்.

எதிரி நாட்டு இராஜதந்திரியானாலும் ஒரு நாட்டுக்கு வருகை தரும்போது நாட்டிலுள்ள தலைவர்களோடு எத்தகைய பாரதூரமான கடும் சொற்பதங்கள் உள்ளடங்கங்கள் தாங்கிய விடயதானத்தைப் பேசினாலும் வெளியரங்கில் சிரித்து இங்கிதமாகப் பேசி பூசி முழுகிச் செல்வதுண்டு. ஆனால், இந்த விஜயம் தொடர்பான தகவல் வெளியானது முதலே அதிரடியான கருத்துக்களும் சமிக்ஞைகளுமே வெளிப்படுத்தியுள்ளமையைக் காணமுடிகின்றது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் சில நாள்களே உள்ள நிலையில் டொனால்ட் ட்ரம்ப் தோல்வியடைந்தால் தற்போதைய அழுத்தங்களில் இருந்து மீள வழியுண்டு என இலங்கை ஆட்சியாளர்களில் ஒரு தரப்பினர் எதிர்பார்க்கக்கூடும். ஆனால், இலங்கை மீது ஜெனிவாவில் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்தது டொனால்ட் ட்ரம்பின் குடியரசுக்கட்சி நிர்வாகம் அல்ல. மாறாக ஜனாதிபதித் தேர்தல் அவரை எதிர்த்து நிற்கும் ஜோ பைடனின் ஜனநாயகக்கட்சி நிர்வாகம். அப்படிப் பார்க்கும்போது யார் ஜனாதிபதி ஆனாலும் இலங்கைக்குக் கடுமையான அழுத்தம் வருவதற்கு வாய்ப்புண்டு. ஏனெனில், இலங்கையைப் போன்று ஆட்சிகள் மாறுகின்றபோது கொள்கைகள் மாறுவது போன்று குறிப்பாக வெளியுறவு விடயங்களில் மாற்றங்கள் அமெரிக்காவில் மாற்றம் அடைவதில்லை. அந்தவகையில் இலங்கை மீதான அழுத்தங்கள் தொடர்வதற்கான ஆபத்து அதிகமாக உள்ளது என்றால் மிகையல்ல.



கடந்த 15 ஆண்டு காலப்பகுதியில் குறிப்பாக 2009 ஆண்டு போர் நிறைவு பெற்ற பின்னர் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை உற்றுநோக்கினால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர ஸ்தானத்திலுள்ள இலங்கையின் மீது அதிக ஆர்வத்தைக் கொண்டுள்ள வல்லரசுளின் விருப்பங்களை சமநிலைப்படுத்தி சமாளிப்பதற்கான தொடர்ச்சியான விரக்தி மிக்க முயற்சிகள் என்றும் வர்ணிக்க முடியும் .

என்னதான் பெரும் வல்லரசுகளுடனான உறவுகளை சமநிலைப்படுத்திக்கொள்ள இலங்கை பகீரத முயற்சிகளை மேற்கொண்டாலும் அது நீண்டகாலத்துக்குச் சாத்தியப்படமாட்டாது. இதற்கு இலங்கையின் மிக மோசமான பொருளாதார நிலையும் முக்கியகாரணமாக அமைந்துள்ளது.

மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டி கடந்த காலத்தில் சமாளித்தது போன்று இனியும் செய்வது மிகக் கடினம். எனவே, இலங்கை விரும்பா விடினும் கூட சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வல்லாதிக்கப் போட்டியில் ஒரு வல்லரசின் பக்கத்தை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளது என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை.

- ஆரோ -
(நன்றி:- 'குளோபல் தமிழ்')

**இலங்கை விரும்பா விடினும் கூட சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வல்லாதிக்கப் போட்டியில் ஒரு வல்லரசின் பக்கத்தை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக் குள்ளாகியுள்ளது என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை.**

# யாழ்.குடாநாட்டில் கொரோனா விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள்!







யாழ்ப்பாண பொலிஸாரின் ஏற்பாட்டில் இளைஞர் சேவை மன்றத்தினர் மற்றும் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் பங்குபற்றுதலோடு 'மீட்டரான வாழ்க்கை' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் கொரோனா விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் சேனாரட்ன, யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணவில, யாழ்ப்பாண பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ மற்றும் யாழ்ப்பாண பொலிஸார் எனப் பலர் கலந்துகொண்டு யாழ் நகரில் சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு கொரோனா நோய் தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான ஸ்ரிக்கர்களை ஒட்டினர்.

மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் முகமாக பஸ்களில் ஸ்டிக்கர் ஒட்டும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதோடு சுகாதார நடை முறைகளைப் பின்பற்றுதல் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

# கடந்த 24 மணித்தியாலத்தில் மேலும் 32 பேர் குணமடைவு

கொழும்பு, ஒக்.29

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 32 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 4,075 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள 8,413 பேரில் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 4,776 ஆக காணப்படுகின்றது.

அத்தோடு 445 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளமையுடன் கொரோனாத் தொற்றினால் இதுவரை 19 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir





கொழும்பு கொட்டாஞ்சேனை அந்தோனியார் தேவாலயத்தில் கடந்த வருடம் ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று குண்டு வெடிப்பில் உயிரிழந்தோருக்கு மைக் பொம்பியோ அஞ்சலி செய்த போது ....

# பொறுப்புக்கூறலிருந்து தப்ப முடியாது இலங்கை

## ராஜபக்ஷ அரசிடம் பொம்பியோ இடித்துரைப்பு

கொழும்பு, ஒக். 28

பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை ஒருபோதும் விலக முடியாது.

- இவ்வாறு ராஜபக்ஷ அரசிடம் இடித்துரைத்துள்ளார் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியா.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றிரவு இலங்கை வந்த மைக் பொம்பியோ, இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்டோரைச் சந்தித்த பின்னர் கொழும்பில் ஊடகவியலாளர்களுடன் பேசினார். இதன்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை இலங்கை உறுதி செய்ய வேண்டும். இவை மிகவும் அவசியம். இந்தக் கடமைகளிலிருந்து இலங்கை ஒருபோதும் விலக முடியாது. - என்றார்.

# அனைத்து நாடுகளுடனும் இணைந்து பயணிப்பதே இலங்கையின் விருப்பம்

## பொம்பியோ முன் சமாளித்தார் தினேஷ்



கொழும்பு, ஒக்.28

அணிசேரா நாடு என்ற வகையில், அனைத்து நாடுகளுடனும் இணைந்து பயணிக்க இலங்கை தயாராகவே உள்ளது.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளருடன் கொழும்பில் இன்று இணைந்து நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்க இராஜாங்கச் செயலாளரின் வருகையானது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே கருதப்படுகின்றது.

இன்று உலகம் முழுவதும் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஆசியாவிலேயே இலங்கைதான், பழமை வாய்ந்த ஜனநாயக நாடாகும்.

90 வருடங்களாக எமது மக்கள் வாக்குரிமையுடன் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நாட்டின் ஜனநாயகம் இன்னும் பலமாகவே உள்ளது என்பதை இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் காண்பித்துள்ளன.

இந்த நாட்டின் ஐக்கியம், நல்லிணக்கம், தேசியப் பாதுகாப்பு தொடர்பாக நாம் ஸ்திரமான நிலைப்பாட்டுடன் இருக்கின்றோம். எமது நட்பு நாடுகளுடன், இணைந்து பணியாற்றவும் நாம் உறுதியாகவே இருக்கின்றோம்.

அத்தோடு, பக்கச்சார்பற்ற அணிசேரா நாடாக இலங்கை தொடர்ந்தும் பயணிக்கும் என்பதையும் கூறிக்கொள்கின்றோம்.

அந்தவகையில், அமெரிக்காவுடனும் ஏனைய நாடுகளுடனும் இலங்கை உறவுகளை வளர்த்துக்கொள்ளும் - என்றார்.

# தன்னந்தனியே கோட்டா பொம்பியோவுடன் பேச்சு



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மைக் பொம்பியோ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை புதன் காலை சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி டெப்லிட்ஸும் கலந்து கொண்டார். இலங்கை அரசு சார்பில் வேறு எவரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவில்லை.

# 10 கிலோ கஞ்சாவுடன் புத்தளத்தில் 2 பேர் கைது

புத்தளம், ஒக்.28

சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியுடைய கேரளக் கஞ்சாவை விற்பனைக்காக ஓட்டோவில் எடுத்துச் சென்ற சந்தேக நபர்கள் இருவர் புத்தளம் கரம்பை பிரதேசத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாலாவி மற்றும் புழுதிவயல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய புத்தளம் பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள புத்தளம் பாலாவி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இதற்கு பின்னால் இருந்து வழிநடத்தினார் எனக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

# மேல் மாகாணத்தில் 3 நாள்கள் ஊரடங்கு

கொழும்பு, ஒக்.28

மேல் மாகாணம் முழுவதும் நாளை வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கு வரும் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் விடுமுறை நாளான வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங்களில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படு கின்றது.

# மணியின் பதவி பறிப்புக்கு இடைக்காலத் தடை விதிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தீர்மானத்துக்கு 14 நாள்கள் இடைக்காலத் தடை விதித்து யாழ்ப்பாணம் மாவட்டம் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தேர்ந்து அனுப்பப்பட்ட வி.மணிவண்ணன், தமது பங்காளிக் கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டமையால் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி யாழ்ப்பாணம் தெரிவத் தாட்சி அலுவலரிடம் கேட்டுக்கொண்டது. அதனடிப்படையில் வி. மணிவண்ணனின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி வறிதாகியதாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

தனது உறுப்புரிமை நீக்கத்தை சவாலுக்குட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சிறப்பு மனுவை தானே தாக்கல் செய்தார் .

மனுவின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் ஆனந்தராசா, பொதுச்செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகர் உள்ளிட்ட நான்கு தரப்பினரை மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

தனது பதவி நீக்கத்தை சட்ட வலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனு தாரர், அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார்.

இந்த மனு நேற்றுச் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் முன்னிலையில் அழைக்கப்பட்டது. மனுதாரரான சட்டத்தரணி வி.மணிவண்ணன், தனது மனுவை ஆதரித்து சமர்ப்பணத்தை முன்வைத்தார். இடைக்காலத் தடை உத்தரவை வழங்குமாறும் பிரதிவாதிகளை மன்றில் முன்னிலையாக அறிவித்தல் அனுப்புமாறும் அவர் கோரினார்.

மனுதாரரின் சமர்ப்பணத்தை ஆராய்ந்து இடைக்கால நிவாரணமான தடை உத்தரவு தொடர்பில் இன்று புதன் கிழமை கட்டளை வழங்குவதாக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் தவணையிட்டது.

மனு இன்று மாவட்ட நீதிபதி விநாயகமூர்த்தி இராமக்கமலன் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

மனுதாரரின் மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு பிரதிவாதிகளை நவம்பர் 11ஆம் திகதி மன்றில் முன்னிலையாக அறிவித்தல் அனுப்ப உத்தரவிடப்படுகின்றது. மனுதாரரின் இடைக்கால நிவாரணமான அவரை யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம் தீர்மானத்துக்கு 14 நாள்கள் இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கப்படுகிறது. - என்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி. இராமக்கமலன் கட்டளை வழங்கினார்.

# வெற்றுக்கார்பன், பேனா குழாய்கள், பத்தூரிகைகள் மீள் சுழற்சி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பித்து வைப்பு

கொழும்பு, ஒக்.29

பாவனையின் பின் ஒதுக்கப்படும் வெற்று கார்பன், பேனா குழாய்கள் மற்றும் பற் தூரிகைகள் மீள் சுழற்சி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்காக தயாரிக்கப்பட்ட முதலாவது கொள்கலன் கடந்த 26 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் இந்நிகழ்ச்சித்திட்டம் 'நாம் வளம்பெற்று நாட்டை வளப்படுத்துவோம்' என பெயரிடப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு பாடசலைகளில் இருந்து ஒதுக்கப்படும் கார்பன், பேனா குழாய்கள் சுமார் 80 கிலோ கிராம்களாகும். வருடமொன்றுக்கு 29 ஆயிரம் கிலோவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து ஒதுக்கப்படும் அளவு இதுவரையில் கணக்கிடப்படவில்லை.

பாவனையின் பின்னர் ஒதுக்கப்படும் பேனா மற்றும் பற் தூரிகைகள் உக்குவதற்கு 100 முதல் 500 வருடங்கள் செல்வதாக சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அனைத்து பாடசாலைகளுக்கும் விசேட கொள்கலன்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 'வெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் பிளாஸ்டிக்' நிறுவனம் இவற்றைக் கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் நடைமுறைப்படுத்துவதை கட்டாய மாக்குவதற்காக அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



# கொரோனாவால் செவ்வாய் உயிரிழந்தோர் முழுமையான விவரங்கள் வெளியாகின

## அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.29

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், மரணித்த இரண்டு பேரின் சடலங்களுக்கு, சட்டவைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில், அவர்களுக்கு கொரொனாத் தொற்று இருந்தமை உறுதியானதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாழைத்தோட்டத்தைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவருக்கும் கொழும்பு 2 ஐச் சேர்ந்த 87 வயதான பெண் ஒருவருக்குமே இவ்வாறு இறப்பின் பின்னர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் இருவரும் மரணிப்பதற்கு முன்னர் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தனர் எனவும் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேநேரம் குறித்த 19 வயதான இளைஞர், பிறந்தது முதலே விசேட தேவையுடையவராக இருந்தவர் எனவும் கூறப்படுகிறது.

இதேநேரம் கொரோனா தொற்றால் ஐ.டி.எச் வைத்தியசாலையில் உயிரிழந்த நபர், ஜா - எல பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஆணொருவரெனசுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அவர்களுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் இதுவரையில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேல் மாகாணத்தில் 131 பேர் கைதாகினர்!

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையில் 131 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



பொலிஸ் தலைமையகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்கிழமை காலை 06 மணி முதல் நேற்று அதிகாலை 05 மணிவரையான காலப் பகுதியில் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத மதுபானங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் இவர்களில் 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்டத்தில் இதுவரை 11 பேருக்குக் கொரோனா உறுதி!

## பிராந்திய சுகாதார பணிப்பாளர் த.விநோதன்



மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் நேற்றுமுன்தினம் வரை 11 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற ஊடகசந்திப்பின்போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

மினுவாங்கொடை கொரோனா கொத்தணி பரவல் ஆரம்பித்த பின்னர் மன்னார் பட்டித்தோட்டம் பகுதியிலும், பேலியகொடை மீன்தொகுதி கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய இருவர் கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய தினங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய இருதினங்களிலும் அடையாளம் காணப்பட்ட 2 கொரோனா தொற்றாளர்கள் கொழும்பில் இருந்து மன்னாருக்கு வந்த போக்குவரத்து விவரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனடிப்படையில் கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 11.20 மணியளவில் கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த (ரத்னா ரவல்ஸ்) என்ற தனியார் பஸ்ஸில் பயணித்து 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.45 மணியளவில் மன்னார் பஸ் நிலையத்தில் இருந்து தலைமன்னார் நோக்கி இலங்கை அரச பஸ்ஸில் பயணத்தை மேற்கொண்ட பயணிகள் மற்றும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த தனியார் பஸ் எச்.எஸ். ரெவல்ஸ் ஊடாக பயணித்த மக்களும் உடனடியாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

இந்த பஸ்களில் பயணித்த மக்கள் உடனடியாக 0718474361 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தமது இருப்பிடத்தை தெரியப்படுத்திக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் இருந்து இன்று வரை 995 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி 11 நபர்களும் கொரோனா தொற்று உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே தொற்று உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்ட 11 பேரில் 2 பேர் சிகிச்சையின் பின்னர் இரணவல வைத்தியசாலையில் இருந்து தமது வீடுகளுக்கு சென்றுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தனிமைப்படுத்தல் முடித்து 73 பேர் வெளியேறினார்கள்

முப்படையினரால் நடத்தப்படும் 08 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த 73 பேர் நேற்று (புதன்கிழமை) வெளியேறியுள்ளனர்.

இதுவரை, தனிமைப்படுத்தலை நிறைவு செய்து 58 ஆயிரத்து 396 பேர் வீடு திரும்பியுள்ளனர்.

முப்படையினரால் நடத்தப்படும் 75 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தற்போது 7 ஆயிரத்து 530 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# அரச மருந்தக ஊழியருக்கு தியத்தலாவையில் தொற்று!

கொழும்பு, ஒக்.29

தியத்தலாவையில் அரச மருந்தகமொன்றின் ஊழியரொருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டமையையடுத்து அந்த மருந்தகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த மருந்தகத்தில் கடமையாற்றிய அனைவரையும் பி.சி.ஆர். பரிசோதனைக்குற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அந்தப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் எஸ். சுதர்சன் தெரிவித்தார்.

இதையடுத்து மருந்தகத்திற்கு கடந்த சில தினங்களில் மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ளவந்தவர்களையும் இனம் காணும் செயற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சுகாதாரப் பரிசோதகர் எஸ். சுதர்சன் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கான தூதரகங்களை இரு நாடுகளில் திறக்க அனுமதி!

## வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, ஒக்.29

முக்கிய இரு நாடுகளில், இலங்கைக்கான தூதரகங்களைத் திறப்பதற்கான திட்டத்துக்கு அமைச்சரவையில் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

ருமேனியா மற்றும் ஸ்பைன் நாடுகளில் இவ்வாறு இலங்கைக்கான தூதரகங்களை திறக்கப்படவுள்ளன.

வெளிவிவகார அமைச்சரால் முன்வைக்கப்பட்ட குறித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், அந்த நாடுகளுடனான உறவினை பலப்படுத்திக் கொள்ளும் நோக்குடனேயே இந்தத் திட்டம் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாத் தொற்று பரவலால் கொழும்பு அபாயமான நிலையில்!

## உண்மையை ஒப்புக்கொண்டார் இராணுவத் தளபதி



கொரோனா பரவல் காரணமாக கொழும்பில் குறிப்பிடத்தக்களவு அபாய நிலை உள்ளமை வெளிப்படையானது என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் இதுதொடர்பாக உறுதியாக எதனையும் கூற முடியாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

சிங்களஊடகமொன்றில்இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


கொழும்பின் சில பகுதிகளில் 7 நாள்கள் வரையில் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டுள்ள போதிலும் நேற்றுமுன்தினம் பொரளையில் 20, கொட்டாஞ்சேனையில் 44, மட்டக்குளியில் 36 பேருக்கு கொரோனா தொற்று அடையாளம்காணப்பட்டதாகத்தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையை அவதானிக்கும்போது, அதாவது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ள நிலையிலும் நடமாட்டங்கள் இடம்பெறுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்கள் வீடுகளிலேயே தங்கியிருப்பார்களானால், இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லைஎன்றும்ஒருவர்தனிமைப்படுத்தப்பட்டிருந்தபோதும் திருமண நிகழ்வொன்றுக்கு சென்ற சம்பவம்கூட பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்குமாயின், அவர் தனது வீட்டிலேயே இருப்பாராயின், அவரின் வீட்டைச் சார்ந்தவர்களுக்கு தொற்று ஏற்படுமே தவிர வெளிநபர்களுக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

# கூட்டுறவுத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்



யாழ்.மாவட்ட கூட்டுறவுத் துறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன் போது கூட்டுறவின் கீழ் உள்ள உற்பத்தி நிறுவனங்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பிரதேச செயலக ரீதியாக இயங்கும் உற்பத்தி நிறுவனங்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டிருந்தன.

இந்தக் கலந்துரையாடலில் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர், அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட செயலகதிட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக கணக்காளர், கூட்டுறவு உதவி ஆணையாளர், பிரதேச செயலாளர்கள், கூட்டுறவு உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வெறிச்சோடியது ஹட்டன் நகரம்

ஹட்டன் நகரம் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்து வர்த்தக நிலையங்களும் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளன. இதனால் நகரப்பகுதி வெறிச்சோடி காணப்படுகின்றது.

சுகாதார மற்றும் பாதுகாப்பு தரப்பினரின் அறிவுறுத்தல்களை பின்பற்றி மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்கின்றனர். ஒரு சிலர் வெளியில் நடமாடுவதை காணமுடிந்தாலும் அவர்களும் சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றியுள்ளனர்.

உயர்தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காகவிசேடபோக்குவரத்து சேவையை இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் வழங்கி வருகின்றன. அரச நிறுவனங்களுக்கும் குறைந்தளவான ஊழியர்கள் வருவதையே காணக்கூடியதாக இருந்தது.

# மூன்று மாத சிசுவுக்கும் கொரோனாத் தொற்று

மதுகமவலல்லாவிட பிரதேசத்தில் மூன்று மாத சிசு ஒன்றுக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள வலல்லாவிட, மாகலன்தாவ பிரதேசத்தை சேர்ந்த சிசு ஒன்றுக்கே இவ்வாறு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வலல்லாவிட பொது சுகாதார பரிசோதகர் திலகரத்ன அதுகோறாள தெரிவித்தார்.

இந்த் சிசுவின் தாய்க்கும் கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த சிசு மற்றும்தாய்சிகிச்சைக்காககொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வீடுகளிலேயே தனிமைப்படுத்தும் முடிவில் எவ்வித சிக்கலும் இல்லை

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 29

கொரோனா தொற்றுறுதி செய்யப்பட்டோருடன் தொடர்புகளைப் பேணிய முதலாவது தொடர்பாளர்களை வீடுகளிலேயே தனிமைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதில் எவ்வித சிக்கலும் கிடையாது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை கண்காணிப்பது சுகாதாரத்துறையினருக்கும் பொலிஸாருக்கும் புதிய விடயமல்ல. நேற்று வரை சுமார் 35 ஆயிரம் பேர் அவரவர் வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். மார்ச் மாதம் தொடக்கம் தற்போது வரை ஒரு இலட்சத்து 85 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் அதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தல் சுகாதாரத்துறையினரால் ஒட்டப்படும். அந்த அறிவித்தல் ஒட்டப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு களிலும் நியமிக்கப்பட்டுள்ள மக்கள் பொலிஸ் அதிகாரிகள் ஊடாக இந்தக் கண்காணிப்பு சேவைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம். மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதோடு சட்டத்துக் கேற்ப அனைவரும் செயற்படுவார்களாயின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தல் பிரச்சினையாகாது. - என்றார்.

# நாடாளுமன்றில் தொற்று நீக்கல்!





கொழும்பு, ஒக்.29

நாடாளுமன்ற பொலிஸ் பிரிவுடன் இணைந்திருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு உள்ளாகியிருந்தார். அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றக் கட்டத் தொகுதி இழுத்து மூடப்பட்டது.

அதன்படி கடந்த திங்களும் செவ்வாயும் நாடாளுமன்ற வளாகம் முற்றும் முழுதாக தொற்று நீக்கம் செய்யப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் தொற்று நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து நேற்று (புதன்கிழமை) மீண்டும் திறக்கப்பட்டவுள்ளது.

இந்த நிலையில், நாடாளுமன்றின் செயற்பாடுகள் வழமைபோல் நேற்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

# தனிமைப்படுத்தலில் உள்ளவர்களின் வீடுகள் பல அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப் படும்!

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படும் நபர்கள் உள்ள வீடுகளில், மற்றுமொரு அறிவித்தலையும் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன கூறியுள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் அறிவித்தல்களுக்கு மேலதிகமாக, இந்த அறிவித்தலையும் காட்சிப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிவித்தலுக்கு அமைய, அந்த வீடுகளில் தங்கியிருப்பவர்கள், அங்கிருந்து வெளியேற முடியாது என்பதுடன், வெளிநபர்கள் அந்த வீடுகளுக்குச் செல்ல முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிவித்தலில், தனிமைப்படுத்தப்பட்டவர்கள் வசிக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலாளர், பொலிஸ் பொறுப்பதிகாரி, கிராம சேவகர் ஆகியோரின் தொலைபேசி இலக்கங்களும் குறித்த பகுதியில் இராணுவ அதிகாரி ஒருவர் இருப்பராயாயின் அவரின் தொடர்பு இலக்கமும் குறிப்பிடப்பட்டிருக்கும் என தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில், தங்களுக்கு அவசிய தேவை ஏற்படும் நபர்கள் இந்த இலக்கங்களைத் தொடர்புகொண்டு, தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்குச் செல்கின்றமை தவிர்ந்த, ஏனைய எந்தவோர் அவசர சந்தர்ப்பம் ஏற்படும் சமயத்திலும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களுக்குத் தொடர்புகொள்ள முடியும் என்றும் எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர், இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் பொலிஸ் பேச்சாளர் வலியுறுத்தியுள்ளார்.

# ஐந்து விதங்களில் சமூக இடைவெளியை பேணினால் கொரோனாவை தவிர்க்கலாம்!

## வைத்தியர் யமுனானந்தா ஆலோசனை

யாழ்ப்பாணம், ஒக். 29

சமூக இடைவெளி பேணல் என்பது சமூகத்தொற்றைக் குறைப்பதற்கான முற்காப்புநடவடிக்கை எனயாழ்.போதனா வைத்தியசாலை பிரதிபணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

கொரோனா கால சமூக இடைவெளி பேணல் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமூக இடைவெளி பேணல் என்பது சமூகத்தொற்றைக் குறைப்பதற்கான முற்காப்பு நடவடிக்கை ஆகும். இதனை ஐந்து நிலைகளில் நோக்க வேண்டும்.

அவையாவன:- தனிமனிதசமூக இடைவெளி, குடும்ப நிலை சமூக இடைவெளி, நிறுவன நிலை சமூக இடைவெளி, கிராம நிலை சமூக இடைவெளி, பிரதேச நிலை சமூக இடைவெளி.

தனிமனித சமூக இடைவெளி என்பது பொதுவிடத்தில் இருவருக்கு இடையே இருக்க வேண்டிய மிகக்குறைந்த தூரமாகும். இதனால் கொரோனாத் தொற்று ஏற்படும் நிகழ்தகவு குறைக்கப்படும். இருவருக்கு இடையிலான தூரம், அவர்கள் தொடர்பு கொள்ளும் கால அளவு அதிகமாயின் தூரமும் அதிகமாக அமைய வேண்டும். சமூக இடைவெளியின் பரிணாமம் தூரத்தின் கணியத்திலும், காலத்தின் கணியத்திலும் தங்கி உள்ளது.

குடும்ப சமூக இடைவெளியைப் பேணல் என்பது ஒரு குடும்பத்தவர் கொரோனாக் காலத்தில் பிறிதொரு குடும்பத்துடன் தொடர்புகொள்ளும் தடவைகளைக் குறைப்பதாக அமையும். அத்தியாவசியமற்ற தரிசிப்புக்களை உறவினர், நண்பர்கள் வீடுகளுக்கு கொரோனாக் காலத்தில் மேற்கொள்ளக் கூடாது.

நிறுவன சமூக இடைவெளியைப் பேணல் என்பது கொரோனாக் காலத்தில் ஒரு நிறுவனமானது தனது செயல்பாட்டை இயக்கிக்கொண்டு இருக்கும்போது வேறு நிறுவனங்கள், பொது அமைப்புக்களுடன் உள்ள நேரடி தொடர்புகளை அத்தியாவசிய தேவையின் நிமித்தம் அன்றி மேற்கொள்ளக் கூடாது. இதனால் அந்த நிறுவனத்தில் இருந்து கொரோனாத் தொற்று வேறு இடங்களுக்குப் பரப்பப்படவோ அன்றேல் வேறு இடங்களில் இருந்து அந்த நிறுவனத்துக்கு கொரோனாத் தொற்று பரவலோ நிகழாமல் தடுக்கலாம்.



அடுத்து கிராம சமூக இடைவெளியைப் பேணல் என்பது குறித்த கிராமம், வேறு பிரதேச மக்களால் தனிமைப்படுத்தப் பட்டு இயற்கையாக இருந்தால் அக்கிராமத்திற்கு கொரோனாத் தொற்று ஏற்படுவதற்கானசாத்தியம்குறைவு. தற்போதைய சூழலில் கிராமிய சமூக இடைவெளி கட்டாயம் பேணப்படல் வேண்டும்.

இறுதியாகப் பிரதேசநிலை சமூக இடைவெளியைப் பேணல். பூகோள பிரதேசரீதியில் தனிமைப்பட்ட பிரதேசங்களில் மக்கள் நடமாட்டத்தை மட்டுப்படுத்துவதாலோ, தேவையற்ற விதத்தில் பயணங்கள் மேற்கொள்வதைக் கட்டுப்படுத்துவதாலோ குறித்த பிரதேசங்கள் கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாக்கப்படும்.

மேற்கூறிய ஐந்து நிலைகளில் சமூக இடைவெளி பேணப்படின், கொரோனாப் பரம்பல் வீதம் வெகுவாகக் குறைக்கப்படும். இவற்றுடன் தனிநபர் சுகாதாரப் பழக்கங்களான முகக்கவசம் அணிதல், கைகழுவுதல், உடற் தொடுகைகளைத் தவிர்த்தல் என்பனவும் முக்கியமானவையாகும் என்றும் தெரிவித்தார்.

# மக்கள் பயன்படுத்தாத காணிகளை ஊடக நிறுவன பெயரில் அபகரிப்பு!

## எச்சரிக்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணத்தில் உரிமையாளர்கள் இல்லாமல் பயன்பாடின்றி காணப்படும் காணிகளை ஊடக நிறுவனம் ஒன்றின் பெயரில் உறுதிகள் தயாரிக்கப் பட்டு, அபகரிக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன எனத் தான் அறிந்து கொண்டுள்ளார் எனவும், அவை தொடர்பில் பிரதேச செயலர்கள் கூடிய கவனம் செலுத்துமாறும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்துக்கு பிரதேச வளங்களை பயன்படுத்தல் எனும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் உள்ள வளங்களை அடையாளப் படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போது , யாழ்ப்பாணத்தில் உரிமையாளர்கள் இல்லாமல் – பாவனையின்றி காணப்படும் காணிகளை அபகரிக்கும் முயற்சியில் கும்பல் ஒன்று ஈடுபட்டுள்ளதாக எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அந்த காணிகளுக்கு ஊடக நிறுவனம் ஒன்றின் பெயரில் போலி உறுதிகளைத் தயாரிக்கும் கும்பல் அக்காணிகளை அபகரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன என அறிகிறேன்.

எனவே இது தொடர்பில் பிரதேச செயலர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

அதேவேளை யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவில் உள்ள பயன்பாடற்ற, வாழ்வாதாரத்தை அதிகரிக்கக் கூடிய அரச மற்றும் தனியார் காணிகள் தொடர்பிலான விவரங்களைத் திரட்டுமாறும், காணிகளை அடையாளம் காண்பதில் உள்ள தடைகளை இனம் கண்டு அவற்றை நீக்குவது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச செயலர்களுக்கு மாவட்ட செயலாளர் அறிவுறுத்தினார்.

# மொத்த வியாபார நிலையங்கள் புறக்கோட்டையில் திறக்க ஏற்பாடு

புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையங்களை நாளாந்தம் காலை 5 மணி தொடக்கம் பகல் 2 மணி வரை திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. என புறக்கோட்டை மொத்த விற்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு புறக்கோட்டை மொத்த விற்பனை பகுதியில் பல பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

மொத்த விற்பனை சேவை நிலையங்களில் நூற்றுக்கு 50 சதவீதமான ஊழியர்களை உள்ளடக்கி சேவை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது.

பொது சுகாதார பரிசோதகர்கள் நாளாந்தம் புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

விற்பனை நிலையங்களுக்கு வரும் நுகர்வோர் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களைக் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேங்காய் பறிக்கத் தென்னையில் ஏறியவர் கீழே வீழ்ந்து பரிதாப சாவு!

## ஏறாவூரில் சம்பவம்

தேங்காய்பறிக்க தென்னை மரத்தில் ஏறியவர் பரிதாபமாக கீழே விழுந்து உயிரிழந்த சம்பவம் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

வந்தாறுமூலை பேக் ஹவுஸ் வீதி பகுதியில் வசிக்கும் சீனித்தம்பி நடராசா (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரமேறி தேங்காய் பறித்து தொழில் செய்து தனது வாழ்வாதாரத்தைத் தேடிக் கொள்ளும் குடும்பஸ்தரான இவர் வழமைபோன்று நேற்றுமுன்தினம்; தென்னை மரமொன்றில் ஏறி தேங்காய் பறித்துள்ளார்.

வந்தாறுமூலையிலுள்ள காணியொன்றிலிருந்த தென்னை மரத்தில் தேங்காய்களை பறித்து விட்டு மரத்திலிருந்து கீழிறங்கும்போது சடுதியாகத் தவறி கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

உணர்வற்றுப் போயிருந்த அவரை வைத்தியசாலையில் சேர்க்க அவசர அம்லன்ஸ் சேவைக்கு அழைத்து அங்கிருந்தவர்கள் உடனடியாக அவரை செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக கொண்டு சென்றனர்.

எனினும் அவர் ஏற்கெனவே மரணித்து விட்டார் என வைத்தியசாலையில் தெரிவிக்கப் பட்டமையையடுத்து சடலம் உடற்கூராய்வுப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ரூ.22 லட்சம் பெறுமதியான மருத்துவ உபகரணம் கொரிய சர்வதேச அமைப்பால் வழங்கப்பட்டது!

கொழும்பு, ஒக்.29

இலங்கையில் கொவிட் – 19 கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக கொரியாவின் சர்வதேச அமைப்பொன்றால் 22 லட்சம் ரூபா பெறுமதியுடைய மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சில் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியிடம் இந்த உபகரணங்கள் கொரிய சர்வதே அமைப்பின் தலைவரால் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

சுகாதாரப்பாதுகாப்பு ஆடைகள் 1, 008, பாதுகாப்பு கண்ணாடிகள் 480, பாதுகாப்பு கையுறைகள் 2, 000 என்பன இவ்வாறு சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சர்வதேச ரீதியில் வழங்கப்படுகின்ற உதவிகளை மதிப்பதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி இதன் போது தெரிவித்தார்.



# ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வுகள் ஒத்திவைப்பு!

கொழும்பு, ஒக். 29

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அதன் அமர்வுகளை ஒத்திவைக்கத் தீர்மானித்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா அச்சம் காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதன்படி ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரை ஆணைக்குழுவின் அமர்வுகளை ஒத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பேருவளை துறைமுகத்தில் மீன் கொள்வனவு ஆரம்பம்!

பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் 6 நாள்களுக்கு பின்னர் மீன்பிடி படகுகளில் இருந்த மீன்களின் கொள்வனவு நடவடிக்கைகள் நேற்றுக் காலை ஆரம்பமானது.

இலங்கை கடற்தொழில் கூட்டுதாபனத்தின்பங்களிப்புடன்சுகாதாரபாதுகாப்புமுறைக்கு அமைவாக கொள்வனவு நடவடிக்கைகள் இடம்பெற்றன என பேருவளை துறைமுக முகாமையாளர் தெரிவித்தார்.

பேருவளை கொரோனா தொற்று நிலை காரணமாக கடற்தொழில் சார்ந்த வர்த்தகர்கள் மீன்களை துறைமுகத்தில் இறக்கி விநியோகிக்கும் நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அனைத்து நாடுகளுடனும் இணைந்து பயணிக்க இலங்கை தயார் நிலையில்!

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 29

அணி சேரா நாடு என்ற வகையில், அனைத்து நாடுகளுடனும் இணைந்து பயணிக்க இலங்கை தயாராகவே உள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்க செயலாளருடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர் -

அமெரிக்க இராஜாங்க செயலாளரின் வருகையானது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே கருதப்படுகிறது.

இன்று உலகம் முழுவதும் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஆசியாவிலேயே இலங்கைதான், பழமைவாய்ந்த ஜனநாயக நாடாகும்.

90 வருடங்களாக எமது மக்கள் வாக்குரிமையுடன் வாழ்ந்து வருகிறார்கள். இந்த நாட்டின் ஜனநாயகம் இன்னும் பலமாகவே உள்ளது என்பதை இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் காண்பித்துள்ளன.

இந்த நாட்டின் ஐக்கியம், நல்லிணக்கம், தேசியப் பாதுகாப்பு தொடர்பாக நாம் ஸ்திரமான நிலைப்பாட்டுடன் இருக்கிறோம். எமதுநட்புநாடுகளுடன், இணைந்து பணியாற்றவும் நாம் உறுதியாகவே இருக்கிறோம்.

அத்தோடு, பக்கச்சார்பற்ற அணிசேரா நாடாக இலங்கை தொடர்ந்தும் பயணிக்கும் என்பதையும் கூறிக்கொள்கிறோம்.

அந்தவகையில், அமெரிக்காவுடனும் ஏனையநாடுகளுடனும் இலங்கை உறவுகளை வளர்த்துக்கொள்ளும்' என அவர் மேலும் தெரிவித்தார்.



# தன்நலம் சார்ந்தே சிந்தித்து இலங்கை அரசு செயற்படும்!

## கூறுகிறார் அமைச்சர் டக்ளஸ்



அமெரிக்க தமது நாட்டு நலன் சார்ந்து சிந்தித்தாலும், இலங்கை தன்னலம் சார்ந்தே சிந்தித்து செயற்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று (புதன் கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளரின் வருகைக்கு வழமை போன்று எதிர்க் கட்சியினர் தமது எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளனர். ஓர் எதிர்க் கட்சியாக அது அவர்களின் வழமையான செயற்பாடாகும்.

அவர் இலங்கைக்கு மாத்திரமல்ல பல்வேறு நாடுகளுக்கும் சென்று ஒப்பந்தங்களை செய்துள்ளார். அமெரிக்கா தமது நாட்டின் நலன் சார்ந்தே செயற்படும். அதேபோன்று இலங்கையும் தமது நலன் சார்ந்தே செயற்படும் எனத் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் சீன தூதரகமும் அறிக்கை ஒன்றின் ஊடாக தமது எதிர்ப்பை தெரிவித்திருக்கின்றதே என ஊடகவியலாளர் அவரிடம் வினவினர்.

அதற்கு பதிலளித்த அமைச்சர், சீனா எதிர்ப்பு தெரிவித்த விடயம் தொடர்பில் தெரியாது. ஆனால் கொவிட் தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணமாக அரசு நெருக்கடியில் உள்ளது. பண தேவை அதிகமாக உள்ளது. சந்திரிகாவின் ஆட்சிக் காலம் தொட்டு பல்வேறு கடன்களை இலங்கை அரசு பெற்றுள்ளது. இவ்வாறான நிலையில் தற்போது உள்ள சூழலிலும் தேவைப்பாடு அதிகம் காணப்படுகின்றது.

இந்த நிலையில் சீன அரசிடம் கடனாக பணம் பெறப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் சீனா எதிர்ப்பை வெளியிட்டிருக்கலாம். - எனவும் அவர் இதன் போதுதெரிவித்தார்.

# 22 நாள்களில் 5,163 பி.சி.ஆர்.சோதனைகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்!

(ந.லோகதயாளன்)

கொரோனா தாக்கம் அதிகரித்த ஒக்றோபர் 5ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான 22 நாள்களில் மட்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 5 ஆயிரத்து 163 பேருக்கு கொறொனாத் தொற்றுத் தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா இரண்டாவது அலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதிய பரிசோதனையில் புங்குடுதீவுப் பெண்மணிக்கு தொற்று உறுதி செய்யப்பட்ட மறுதினத்தில் இருந்து மேற்கொண்ட ஆய்வுகளின் எண்ணிக்கையே இதுவாகும் என போதனா வைத்தியசாலையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன் அடிப்படையில் 22 நாள்களிற்குள் 5 ஆயிரத்து 163 பேருக்கு ஆய்வு செய்த காலத்தில் 43 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. ஆரம்ப நாள்களில் தினசரி நூறை அண்டிய எண்ணிக்கையில் இடம்பெற்ற பரிசோதனைகள் தற்போது 200ஐ தாண்டி 300ஐ அண்மித்த எண்ணிக்கையில் பரிசோதனைகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெறும் பரிசோதனையில் வடக்கின் 5 மாவட்ட வைத்தியசாலைகள் மட்டுமன்றி வடக்கில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்கைச் சேர்ந்தவர்களிற்கான பரிசோதனைகளும் போதனா வைத்தியசாலையிலேயே இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




# யாழ். பல்கலை விவசாய ஆராய்ச்சி நிலையத் திறப்பு விழா ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத் திறப்பு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த நிலையிலேயே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் 01 ஆம் திகதி வரை மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதால் நிகழ்வு ஒத்திவைக்கப்படுவதாக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தரின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜெய்க்கா செயற்றிட்டத்தின் கீழ் கல்வி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் 1.6 பில்லியன் ஜப்பானிய ஜென் (இலங்கை ரூபாவில் 2.2 பில்லியன்) பெறுமதிக்கு கட்டடங்கள் மற்றும் ஆய்வு கூட உபகரணங்கள் மற்றும் நவீன விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

கட்டுமானப் பணிகள் கடந்த வருடம் நிறைவு பெற்ற பின்னரும், பாவனைக்கு விடாதமை தொடர்பாகக் கவலையடைந்த ஜப்பானிய அரசாங்கம், அதனை விரைவில் திறந்து பாவனைக்கு விடுமாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அழுத்தம் கொடுத்தமையையடுத்து, இந்தக் கட்டடத் தொகுதியை எதிர்வரும் 31 ஆம் திகதி திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெறவிருந்த இந்த நிகழ்வுக்குக் கொழும்பிலிருந்து கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இலங்கைக்கான ஜப்பானிய உயர் ஸ்தானிகர் அகிரா சுகியமா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா ஆகியோர் வருகை தரவிருந்த நிலையில், கொழும்பு மற்றும் அதனையண்டிய பகுதிகளில் ஊரடங்கு சட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதால் நிகழ்வை ஒத்திவைப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.10.2020 இல் வெளியிடப்பெற்றது.